بسم الله الرحمن الرحيم

إِنَّ الْحَمْدَ لِلَّهِ نَسْتَعِينُهُ نَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللَّهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَسَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللَّهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُضْلِلِ اللَّهُ فَلاَ هَادِىَ لَهُ أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَأَشْهَدُ أَنْ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ أَمَّا بَعْدُ

இன்னல் ஹம்த லில்லாஹி. நஸ்தஈனுஹு வநஸ்தக்ஃபிருஹு. வநவூது பில்லாஹி மின் ஷுரூரி அன்புஸினா. மை யஹ்திஹில்லாஹு ஃபலா முளில்ல லஹு. வ மை யுள்லில் ஃபல ஹாதிய லஹு. அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரஸூலுஹு. அம்மா பஃது

يَاأَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ مِنْ نَفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً وَاتَّقُوا اللَّهَ الَّذِي تَسَاءَلُونَ بِهِ وَالْأَرْحَامَ إِنَّ اللَّهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا

யா அய்யுஹன்னாஸுத்தகூ ரப்பகுமுல்லதீ ஹலககும் மின் நஃப்ஸிவ் வாஹிதா. வஹலக மின்ஹா ஸவ்ஜஹா. வ பஸ்ஸ மின்ஹுமா ரிஜாலன் கஸீரவ் வநிஸாஆ. வத்தகுல்லாஹல்லதீ தஸாஅலூன பிஹி வல் அர்ஹாம். இன்னல்லாஹ கான அலைக்கும் ரகீபா

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ

யா அய்யுஹல்லதீன ஆமனுத்தகுல்லாஹ ஹக்க துகாதிஹி. வலா தமூத்துன்ன இல்லா வஅன்தும் முஸ்லிமூன்.

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا . يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا

யா அய்யுஹல்லதீன ஆமனுத்தகுல்லாஹ் வகூலூ கவ்லன் ஸதீதா. யுஸ்லிஹ் லகும் அஃமாலக்கும் வயக்ஃபிர்லகும் துனூபகும். வ மை யுதியில்லாஹ வரஸூலஹு ஃபகத் ஃபாஸ ஃபவ்சன் அளீமா.

إِنَّ أَصْدَقَ الْحَدِيثِ كِتَابُ اللهِ ، وَأَحْسَنَ الْهَدْيِ هَدْيُ مُحَمَّدٍ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ ، وَشَرَّ الأُمُورِ مُحْدَثَاتُهَا ، وَكُلَّ مُحْدَثَةٍ بِدْعَةٌ ، وَكُلَّ بِدْعَةٍ ضَلاَلَةٌ ، وَكُلَّ ضَلاَلَةٍ فِي النَّارِ

இன்ன அஸ்தகல் ஹதீஸி கிதாபுல்லாஹ். வஅஹ்ஸனல் ஹத்யி ஹத்யு முஹம்மதின் (ஸல்). வஷர்ரல் உமூரி முஹ்தஸாத்துஹா. வகுல்ல முஹ்தஸத்தின் பித்ஆ. வகுல்ல பித்அத்தின் ளலாலா. வகுல்ல ளலாலத்தின் ஃபின்னார்.

அன்பிற்குரிய பெரியோர்களே தாய்மார்களே சகோதர சகோதரிகளே நாமெல்லாம் அல்லாஹ்வின் அருள் நிறைந்த பெருநாள் தினத்திலே இங்கே ஒன்று கூடியிருக்கின்றோம்.

இந்தப் பெருநாள் என்பது அல்லாஹ்வைப் பெருமைப்படுத்துவதற்குரிய நாளாகும். இஸ்லாம் மனித குலத்திற்கு இரண்டு பெருநாட்களை வழிகாட்டியுள்ளது. இந்த இரண்டு நாட்களுமே அல்லாஹ்வைத் தக்பீர் கூறி பெருமைப் படுத்துவதும், ஏழைகளுக்கு உணவளிப்பதும் ஆகும்.

நாம் நோன்புப் பெருநாளில் ஈதுல் ஃபித்ர் எனும் நோன்புப் பெருநாள் தர்மத்தை ஏழைகளுக்கு வழங்குகிறோம். அது போன்று ஹஜ்ஜூப் பெருநாளில் குர்பானி இறைச்சியை ஏழைகளுக்கும், உறவினர்களுக்கும் வழங்குகிறோம்.

இதன் மூலம் இஸ்லாம் எல்லா நிலைகளிலும் பிறர் நலம் பேணக் கூடிய மார்க்கம் என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

இன்றைக்கு கொரோனா எனும் நோய்ப்பரவலின் காரணமாக உலகத்தின் பலநாடுகளிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏழைகளெல்லாம் உண்பதற்கு உணவின்றி வாடக்கூடிய பரிதாபமான நிலைகளைக் காண்கிறோம்.

இந்த ஈகைத் திருநாள் ஏழைகளின் துயர் துடைக்கும் நன்னாளாக அமைய வேண்டும். இந்த ஊரடங்கினால் தவிக்கும் ஏழைகளுக்கு நாம் வாரிவழங்க வேண்டும்.

இறைநம்பிக்கையாளர்களைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

ஒருவருக்கொருவர் கருணை புரிவதிலும், அன்பு செலுத்துவதிலும் இரக்கம் காட்டுவதிலும் இறை நம்பிக்கையாளர்களை ஓர் உடலைப் போன்று நீ காண்பாய். (உடலின்) ஓர் உறுப்பு சுகவீனமடைந்தால் அதனுடைய அதனுடன் மற்ற உறுப்புகளும் ( சேர்ந்து கொண்டு) உறங்காமல் விழித்துக் கொண்டு இருக்கின்றன. அத்துடன் (உடல் முழுவதும்) காய்ச்சலும் கண்டு விடுகின்றது.

இந்த ஹதீஸ் புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. உடல் உறுப்புகளில் ஓர் உறுப்பு, மற்ற உறுப்புகளுக்கு எவ்வாறு உதவி புரிகின்றதோ அதைப் போன்று ஆள் வெவ்வேறாக இருந்தாலும் ஈமானில் ஒன்றிணைந்தவர்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு உதவிகள் புரிய வேண்டும்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரன் ஆவான். அவனுக்கு இவன் அநீதி இழைக்கவும் மாட்டான்; அவனை (பிறரது அநீதிக்கு ஆளாகும்படி) கைவிட்டு விடவும் மாட்டான். எவர் தம் சகோதரனின் தேவையை நிறைவு செய்வதில் ஈடு பட்டிருக்கின்றாரோ அவரது தேவையை நிறைவு செய்வதில் அல்லாஹ்வும் ஈடுபட்டிருக்கின்றான். எவர் ஒரு முஸ்லிமின் ஒரு துன்பத்தை நீக்குகின்றாரோ அவரை விட்டும் அல்லாஹ்வும் மறுமை நாளின் துன்பத்தை நீக்குகின்றான். எவர் ஒரு முஸ்லிமின் குறைகளை மறைக்கின்றாரோ அவரது குறைகளை மறுமை நாளில் அல்லாஹ்வும் மறைக்கின்றான்' எனக் கூறினார்கள். இந்த ஹதீஸ் புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே நாம் இந்த ஈகைத் திருநாளில் ஏழைகளின் துயர் துடைக்க பாடுபடுவோம். ஏழைகளுக்கு நம்மால் இயன்ற உதவிகளைச் செய்வோம். மறுமையின் கொடிய நரக வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுவோம். இந்தக் கொரோனா எனும் கொடிய நோய் நீங்குவதற்காகவும், மக்கள் நிம்மதியான வாழ்வைப் பெறுவதற்காகவும் இந்த நன்னாளில் அல்லாஹ்விடம் இறைஞ்சுவோம். நாம் செய்த பாவங்களுக்கு பாவமன்னிப்புக் கோருவோம். நாம் இரமலானில் எந்த இறையச்சத்தை அடைவதற்காக நோன்பு நோற்றோமோ அந்த இறையச்சத்தைப் பெற்று உண்மையாக இறைவனை அஞ்சி வாழக்கூடிய மக்களாக அல்லாஹ் நம் அனைவரையும் ஆக்கி அருள்புரிவானாக என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

வஆஹிருத் தஃவானா அனில் ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.